ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2264/12 - 2022 ජනවාරි මස 26 වැනි බදාදා - 2022.01.26

*2264/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ (2) என்னும் பிரிவின் கீழ், எம்பிலிபிடிய நகர சபையின் தவிசாளர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

நகர சபை சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் கௌரவ ஆளுநரினால் தவிசாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதன் காரணமாக எம்பிலிபிடிய நகர சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேலே கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் தவிசாளர் பதவி வகித்த வவுலன் பொக்க கமகே லலித் தர்மகீர்தி என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் எம்பிலிபிடிய நகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக சுபசிங்ஹ பதிரனகே தினேஷ் மதுசங்க என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

எம்பிலிபிடிய நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான சுரங்க அம்பகஹதென்னெ ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு சுபசிங்ஹ பதிரனகே தினேஷ் மதுசங்க என்பவர் எம்பிலிபிடிய நகர சபையின் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**சுரங்க அம்பகஹதென்னெ,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
எம்பிலிபிடிய நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
இரத்தினபுரி,
2022, சனவரி 26.

EOG 1-0255

1A - G 35900— 30 (2022/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ (2) என்னும் பிரிவின் கீழ், எம்பிலிபிடிய நகர சபையின் துணைத் தவிசாளர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக எம்பிலிபிடிய நகர சபையின் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேலே கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் துணைத் தவிசாளர் பதவி வகித்த சுபசிங்ஹ பதிரனகே தினேஷ் மதுசங்க என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் துணைத் தவிசாளர் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் எம்பிலிபிடிய நகர சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான துணைத் தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒலுகல விதாரனலாகே சரத் விதாரன என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

எம்பிலிபிடிய நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுரங்க அம்பகஹதென்னெ ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஒலுகல விதாரனலாகே சரத் விதாரன என்பவர் எம்பிலிபிடிய நகர சபையின் துணைத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**சுரங்க அம்பகஹதென்னெ,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
எம்பிலிபிடிய நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
இரத்தினபுரி,
2022, சனவரி 26.

EOG 1-0256